**அபி வெனுவென் அபி நிதியம் - 2014**

-----------------------------------------------------------------------

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 11(7) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அபி வெனுவென் அபி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வீடமைப்பு நிர்மாணத்திற்காக இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 136,000,000 தொகையில் 2014 திசெம்பர் 31 ஆந் திதகியில் உள்ளவாறு ரூபா 127,305,345 தொகை மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மொத்தத் தொகையும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக எஞ்சிய ரூபா 8,694,655 இனால் செலவினம் அதிகரித்தும் பெறவேண்டிய தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,713,542 தொகையான பொறிகள் மற்றும் உபகரணங்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையினால் உரிய ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757 | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 14,330,738 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் ரூபா 1,713,542 பெறுமதியான இருப்புக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2008 பெப்ரவரி 19 ஆந் திகதிய 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 8 ஆவது பிரிவு | மீளாய்வாண்டின் போது முகாமைத்துவச் சபைக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது திறைசேரி உண்டியல்களில் ரூபா 141,651,981 தொகையும் நிலையான வைப்புக்களில் ரூபா 593,947,151 தொகையும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிவிளைவுகள் ரூபா 77,029,760 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா ரூபா 67,310,121 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 144,339,881 வீழ்ச்சியினைக் காட்டியது. வருமானம் ரூபா 135,126,960 இனால் குறைவடைந்திருக்கும் போது மேலும் செலவினம் ரூபா 9,212,921 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டமும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின்படி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும், 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் படி வருடாந்த பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் 4.1(இ) பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 430,555,025 மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் நலிவுகள் அவ்வப்போது முகாமைத்துவத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு